Haad - Society
of Islamic Guidance
in Unaizah

جمعية هاد
للدعوة والإرشاد
وتوعية الجاليات في عنيزة

ملخص أعمال الحج اليومية (اللغة التاميلية)

ஹஜ் தினசரி வழிகாட்டி



ஆகவே, எவர்கள் அங்கு பிரயாணம் செல்ல சக்தி உடையவர்களாக இருக்கிறார்களோ அத்தகைய மனிதர்கள் மீது அல்லாஹ்வுக்காக (அங்கு சென்று அவ்)வீட்டை ஹஜ்ஜுச் செய்வது கடமையாகும். (3:97)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறினார்கள்: "எவர் (அல்லாஹ்வின்) வீட்டை ஹஜ்ஜு செய்து அதில் ஆபாசமாகப் பேசவில்லையோ, பாவம் செய்யவில்லையோ அவர் தன் தாய் பெற்றெடுத்த நாளில் இருந்ததைப் போன்று திரும்புகிறார்."

(அபூஹுரைரா (ரலி) | புகாரி, முஸ்லிம்)

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறினார்கள்: "ஹஜ் மப்ரூர்" - க்கு (ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு) சொர்க்கத்தைத் தவிர வேறு கூலி இல்லை".

(அபூஹுரைரா (ரலி) | புகாரி, முஸ்லிம்)

"ஹஜ் மப்ரூர்" (ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்) என்பதன் பொருள்:

1. அது ஹலாலான பொருளீட்டால் செய்யப்பட வேண்டும்.
2. ஹஜ்ஜின் போது அநீதி, பாவம் மற்றும் வீண் விவாதங்களைத் தவிர்த்திட வேண்டும்.
3. நபி (ஸல்) அவர்களின் சுன்னாஹ்வின் படி ஹஜ்ஜை நிறைவேற்றிட வேண்டும்.
4. ஹஜ்ஜை மற்றவர்களுக்குக் காட்டும் நோக்கில் செய்யாமல், இக்லாஸுடன் அல்லாஹ்வுக்காக நிறைவேற்ற வேண்டும்.
5. ஹஜ்ஜை முடித்த பின் பாவங்கள் மற்றும் தீய செயல்களில் இருந்து விலகியிருக்க வேண்டும்.

1 பிரசுரம்



பயணத்தின் ஒழுங்குமுறைகள்


- பயணம் என்பது, வீடு வாசல் மற்றும் குடும்பத்தினரை விட்டுப் பிரிவதாகும். அரபி மொழியில் இதற்கு ஸஃபர் என்பர். தெளிவாகுதல், வெளிப்படுதல் என்பது இதன் அகராதிப் பொருள். பயணம் என்பது, மனிதர்களின் குணங்களையும் இயல்புகளையும் வெளிப்படுத்துவதால் ஸஃபர் என்று வழங்கலானது.
- சட்டநிலை: பயணத்தின் நோக்கம் எதுவோ அதைப் பொறுத்ததாகும். இது ஓர் இபாதத் - வணக்க வழிபாட்டிற்காக எனில் அந்தப் பயணமும் ஓர் வணக்கமாகும். ஏதேனும் பாவத்திற்காக எனில் அந்தப் பயணமும் பாவமாகும்.
- அன்பானவர்களே! உங்களது இந்தப் பயணம் ஓர் இபாதத் - வழிபாடு ஆகும். நீங்கள் உங்கள் வீட்டில் இருந்து புறப்பட்டது முதல் திரும்பி வந்து சேரும் வரை யில் உங்களுக்கு நற்கூலி எழுதப்படுகிறது.

பயணத்தின் துஆ: வாகனத்தில் பயணம் தொடங்கியதும் இந்த துஆவை ஓதவும்:

اَللهُ اَكْبَرُ , اَللهُ اَكْبَرُ , اللّٰهُ اَكْبَرُ, سُبْحَانَ الَّذِى سَخَّرَ لَنَا هذَا وَمَا كُنَّا لَهُ مُقْرِنِيْنَ وَ اِنَّا اِلى رَبِّنَا لَمُنْقَلِبُوْنَ , اَللّٰهُمَّ اِنَّا نَسْئَلُكَ فِى سَفَرِنَا هذَا الْبِرَّ وَ التَّقْوَى وَمِنَ الْعَمَلِ مَا تَرْضَى, اَللّٰهُمَّ هَوِّنْ عَلَيْنَا سَفَرَنَا هذَا وَاطْوِعَنَّا بُعْدَهُ, اَللّٰهُمَّ أنْتَ الصَّاحِبُ فِي السَّفَرَ وَالْخَلِيْفَةُ فِى الأهْلِ, اَللّٰهُمَّ اِنِّى اَعُوْذُ بِكَ مِنْ وَعَثَاءِ السَّفَرِ وَكَآبَةِ الْمَنْظَرِ وَسُوْءِ الْمُنْقَلَبِ فِى الْمَالِ وَالأهْلِ

உச்சரிப்பு: அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், ஸுப்ஹா னல்லதிஃ ஸக்கர லனா ஹாஃதா வ மா குன்னா லஹு முக்ரினீன், வ இன்னா இலா ரப்பினா ல முன்கலிபூன், அல்லாஹும்ம இன்னா நஸ்அலுக பீ ஸபரினா ஹாஃதல் பிர்ர வத்தக்வா, வ மினல் அமலி மா தர்ழா, அல்லாஹும்ம ஹவ்வின் அலைனா ஸபரனா ஹாஃதா வாத்வி அன்னா புஅ;தஹ், அல்லாஹும்ம அன்தஸ் ஸாஹிபு பிஸ் ஸபர் வல் கலீபத்து பில் அஹ்ல். அல்லாஹும்ம இன்னீ அஊது பிக்க மின் வஅ;ஃதா யிஸ்ஸபர், வ கஆபத்தில் மன்ழர் வ ஸூயில் முன்கலப் பில் மாலி வல் அஹ்ல்.

- உயரத்தில் ஏறும்போது அல்லாஹு அக்பர் என்றும் பள்ளத்தில் இறங்கும்போது ஸுப் ஹானல்லாஹ் என்றும் சொல்லுங்கள்.



Haad - Society of Islamic Guidance in Unaizah
جمعية هاد للدعوة والإرشاد وتوعية الجاليات في عنيزة

பிரசுரம் 1

பயணத்தின் ஒழுங்குமுறைகள்



- நீங்கள் செய்யும் எல்லா அமல்களிலும் அல்லாஹ் ஒருவனுக்காகவே என்று நிய்யத் - ஐ தூய்மையாக்கிக் கொள்ளுங்கள்.
- ஹஜ்ஜின் எல்லா கிரியைகளிலும் செயல்களிலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதை ஆவல் கொள்ளுங்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களது ஹஜ்ஜின் கிரியைகளை என்னிடம் இருந்து கற்றுக்கொள்ளுங்கள்.



- அல்லாஹ்விடம் அதிகம் அதிகம் பாவமன்னிப்புக் கோருங்கள், பாவங்களிலிருந்து விடுபட்டு அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள். ஏனெனில் அதுதான் அனைத்து நன்மைகளுக்கும் திறவுகோல் ஆகும்.
- ஹஜ்ஜும் உம்ராவும் ஒரு பயிற்சிப்பாசறையாகவும், உள்ளங்களைப் பண்படுத்தி ஒழுக்கங்களைச் சீராக்கும் சிறந்த செயற்களமாகவும் உள்ளதென்பதை நினைவில் வையுங்கள்.
- அல்லாஹ்வின் நேசத்தை நீங்கள் விரும்புகிறீர்கள் எனில் : அவன் உங்கள் மீது கடமையாக்கியுள்ள வழிபாடுகளை நிறைவேற்றுங்கள். விலக்கியுள்ளவற்றை விட்டு விலகி விடுங்கள். பொய், புறம், கோள், மோசடி, மானக்கேடான சொல் - செயல் மற்றும் எல்லாப் பாவங்கள் குறித்தும் எச்சரிக்கையாக இருங்கள்.
- ஜமாஅத் தொழுகையில் முதல் தக்பீரிலேயே இமாமுடன் சேர்ந்து தொழுங்கள். அதனைத் தவற விடாதீர்க்ள். இந்தப் பயணம் நிறைவடையும் வரையில் ஒரு விநாடி கூட பயனின்றி கழிந்திட வேண்டாம்.
- உங்களுடன் மனம் நோகும்படியாக நடத்தல், உங்களது கருத்தைப் புறக்கணித்தல் போன்றவை ஏற்பட்டால் பொறுத்துக்கொள்ளுங்கள். பதிலுக்குப் பதில் கொடுப் பதில் இறங்காதீர்கள். தேவை இல்லாத, வீண் செயல்களை விடுவது இஸ்லாத்தின் அழகிய பண்பாடாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- யாருக்காவது அறிவுரை கூறுவதாயின், அதனை தனிமையில் மேற்கொள்வதைக் கடைப் பிடியுங்கள். நன்மை புரியுமாறு ஏவுதல், தீமையைத் தடுத்தல் ஆகியவற்றை அறிவார்ந்த முறையிலும் அழகிய அறிவுரை மூலமும் மேற்கொள்ளுங்கள்.

பிரசுரம் 2

பிறை 8 - தர்வியா நாளின் அமல்கள்

- தர்வியா நாள் என்பது துல்ஹஜ் எட்டாம் நாள். இதன் பெயர் காரணம், ஹாஜிகள் இந்நாளில் தூரமான பயணத்திற்காகத் தேவையான தண்ணீரைத் தயாராக நிறைத்து வைத்துக் கொள்வார்கள் என்பதாகும். (தர்வியா: தண்ணீர் நிறைத்தல், தயார் செய்து வைத்தல்)
- உம்ராவை முடித்துவிட்டு ஹஜ்ஜை எதிர்பார்த்து இருக்கும் ஹாஜிகள் யவ்முத் தர்வியா (துல்ஹஜ் பிறை 8) அன்று தாம் தங்கியிருக்கும் இடத்திலேயே முற்பகல் நேரத்தில் ஹஜ்ஜுக்காக நிய்யத் வைத்து மீண்டும் இஹ்ராமை ஆரம்பிக்க வேண்டும்.
- ஆகவே, முன்பு போன்று இஹ்ராமுக்கு முன் செய்யவேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும். அதாவது, குளிக்க வேண்டும். நறுமணம் பூச வேண்டும். லப்பைக் ஹஜ்ஜன் அதாவது ஹஜ்ஜுக்காக ஆஜராகி இருப்பதாக உரக்க சொல்ல வேண்டும்.
- அத்துடன், லப்பை(க்)கல்லாஹும்ம லப்பைக் லப்பை(க்)க லா ஷரீக்க ல(க்)க லப்பைக் இன்னல் ஹம்த வன் நிஅ;ம(த்)த ல(க்)க வல் முல்க் லா ஷரீக்க லக
- உரத்த குரலில் அதிகமதிகமாக தல்பியா சொல்ல வேண்டும்
- தாங்கள் தங்கியிருக்கும் இடங்களிலிருந்து புறப்பட்டு ளுஹ்ர் தொழுகைக்குள் மினா சென்றடைய வேண்டும். அங்கு பிறை 9 காலை வரை தங்கியிருக்க வேண்டும். இவ்வாறு மினாவில் இரவு தங்குவது சுன்னாஹ்வாகும்.
- அங்கு ளுஹர், அஸ்ர், மஃக்ரிப், இஷா ஆகிய தொழுகைகளை அவற்றிற்குரிய நேரங்களில் தொழ வேண்டும்.
- 4 ரக்அத் தொழுகைகளை 2 ரக்அத் ஆக சுருக்கித் தொழவேண்டும். ஏனெனில், நபி(ஸல்) அவ்வாறே தொழுதார்கள்.

பிரசுரம் 2

பிறை 8 - தர்வியா நாளின் அமல்கள்



கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) கூறினார்கள்: "ஹஜ் மப்ரூர்" - க்கு (ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு) சொர்க்கத்தைத் தவிர வேறு கூலி இல்லை".

(புகாரி, முஸ்லிம்)

- நீங்கள் சிறப்புக்குரிய நாட்களில், புனிதமான தலங்களில் இருக்கிறீர்கள். இந்நாட்களின் அமல்கள் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானவை ஆகும்.
- ஒவ்வொரு வினாடியையும் நன்கு பயன்படுத்திக்கொள்ள ஆவல் கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்குக் கோபமூட்டும் செயல்களில் இருந்து உங்கள் உறுப்புகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.
- இந்தப் புனித தலங்கள் நன்மையைக்கொண்டு உங்களுக்காக சாட்சியம் சொல்லும் வகையில் நடந்து கொள்ளுங்கள்.
- நபி(ஸல்) அருளினார்கள்: “ஹஜ் - உம்றாவுக்காக ஆஜராகி இருப்பதாக (தல்பியாவை) ஒருவர் முழங்கினாலோ, அல்லாஹ் பெரியவன் என்று முழங்கினாலோ அவருக்குச் சுவனபதியைக் கொண்டு நற்செய்தி சொல்லப்படுகிறது”. (நூல்: ஸஹீஹ{ல் ஜாமிஉ)
- எனவே, அல்லாஹ் அக்பர், லா இலாஹ இல்லல்லாஹ், ஸுப்ஹானல்லாஹ் போன்ற திக்ர்களை அதிகம் சொல்லிக் கொண்டிருங்கள்.

நற்குணத்துடன் நடந்து கொள்வது, ஹாஜிகளுக்குப் பணிவிடை செய்வது, அவர்களுக்குத் தொல்லை கொடுக்காதிருப்பது, அவர்களுடன் பொறுமையாக நடந்து கொள்வது ஆகிய செயல்களின் பேரில் உங்களுக்கு அல்லாஹ்விடத்தில் மகத்தான கூலி உண்டு என்பதை மறவாதீர்கள்.




3
பிரசுரம்

பிறை 9 - அரஃபா நாளின் அமல்கள்



- இந்நாள் ஹஜ்ஜின் மிகவும் முக்கியமான நாள் ஆகும். அடிப்படைக் கடமையை நிறைவேற்றும் நாள் ஆகும்.
- நபி (ஸல்) கூறியுள்ளார்கள்: “ஹஜ் என்பது அரஃபா தான்”
- எனவே அந்நாளின் எந்த விநாடியும் வீணாகக் கழிந்து விடக்கூடாது. ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்: “மிக அதிக அளவில் நரகத்திலிருந்து மனிதர்களை அல்லாஹ் விடுதலை செய்யும் நாள் அரஃபா நாளைத் தவிர வேறில்லை. திண்ணமாக அல்லாஹ் (உலகின் பக்கம்) நெருங்கி வந்து தன் அடியார்கள் குறித்து மலக்குகளிடம் பெருமை பாராட்டிய வண்ணம், இவர்கள் எதனை விரும்புகிறார்கள்? என்று கேட்கிறான்”. (நூல்: முஸ்லிம்)
- பிறை 9 அன்று ஸுப்ஹு தொழுதப் பிறகு, சூரியன் நன்கு உதித்தப் பிறகு அரஃபா நோக்கிப் புறப்பட வேண்டும்.
- புறப்பட்டதிலிருந்து அரஃபாவில் கூடாரத்தை அடையும் வரை தல்பியா மற்றும் தக்பீர் உரக்கக் கூற வேண்டும். உரத்த குரலில் அதிகமதிகமாக தல்பியா சொல்ல வேண்டும்
- அரஃபாவில் எங்கு வேண்டுமானாலும் தங்கலாம். ஏனெனில் நபி (ஸல்) கூறினார்கள்:
- “நான் இந்த இடத்தில் நின்றுகொண்டிருக்கிறேன். அரஃபா முழுவதும் இவ்வாறு நிற்பதற்கான இடங்களே ஆகும்”
- முடிந்தால் பகல் வெயில் சாயும் வரை நமிரா எனும் பகுதியில் தங்குவது சிறப்பு.
- லுஹ்ர் மற்றும் அஸ்ர் தொழுகைகளை லுஹ்ர் தொழுகையின் நேரத்தில் இரண்டு இரண்டு ரக்அத்துகளாக தொழ வேண்டும்.
- சூரியன் மறையும் வரை அரஃபாவில் தங்கி இருத்தல் வேண்டும்.

ஹஜ்ஜில் இருப்பவர்கள் அரஃபாவில் தங்கும் அன்று நோன்பு நோற்பது கூடாது.



يوم عرفة

பிறை 9 - அரஃபா நாளின் அமல்கள்



அரபா நாளின் அறிவுரைகள்:

- துஆ செய்யும்போது கைகளை உயர்த்துவது நபி (ஸல்) அவர்களின் வழிமுறையாகும். இது அமர்ந்த நிலையிலோ அல்லது வாகனத்தில் பயணித்த நிலையிலோ இருந்தாலும் பொருந்தும். ஆரஃபா நாளின் இறுதிப் பொழுதுகளில் துஆ, திக்ர் மற்றும் குர்ஆன் ஓதுதலில் முழுமையாக ஈடுபடுவது ஹாஜிக்கு முன்னெடுத்துக் கொள்ள வேண்டிய முறையாகும்.
- நபி (ஸல்) அவர்களிடமிருந்து பதிவாகியுள்ள துஆக்களையும், திக்ருகளையும் அதிகமாக ஓதுவது மிகவும் சிறந்ததாகும். அவற்றை முழுமையாக அறிந்து கொள்ளாவிட்டாலும், தனக்குத் தெரிந்தவாறு தன்னுடைய மன்னிப்பிற்காகவும், தன் பெற்றோர், சந்ததிகள் மற்றும் அனைத்து முஸ்லிம்களின் நலன்களுக்காகவும் துஆ செய்திட வேண்டும்.
- சோர்வு ஏற்பட்டால், நற்பேச்சுகளில் ஈடுபடலாம்; அல்லது குர்ஆன் ஓதலாம்; அல்லது அல்லாஹ்வின் கருணை மற்றும் அவனுடைய அருள்களைப் பற்றிய நூல்களைப் படித்து புத்துணர்ச்சி பெறலாம். பின்னர் மீண்டும் துஆ செய்தலிலும், பணிவோடு அல்லாஹ்விடம் மன்றாடுதலிலும் ஈடுபடலாம்.
- பகலின் இறுதி (மாலை) நேரங்களை துஆ செய்வதில் கழிக்க முயற்சிக்க வேண்டும், ஏனெனில், அவை இறைவனை நோக்கிய வழிபாட்டிற்கான முக்கியமான சமயங்களாகும்.
- சூரியன் அஸ்தமிக்கும் இந்தப் பொழுதில், அல்லாஹ்வின் மீது அளவிலா அன்பும், தன் பாவங்களுக்கு மன்னிப்புப் பெற்று 'மக்பூல்' (ஏற்றுக்கொள்ளப்பட்டவர்) ஆகும் நம்பிக்கையும் ஒருவரின் இதயத்தை நிறைத்திருக்க வேண்டும்.
- கண்ணீர் சொரிந்து அல்லாஹ்விடம் முறையிடுவீராக! நிச்சயமாக அவன் தன் அடியார்களை மிகவும் மன்னிப்பவனாகவும், அளவிலா கருணையாளனாகவும், நிகரிலா கிருபையாளனாகவும், நுட்பமான (அறிவுடைய)வனாக இருக்கின்றான்..



4 பிரசுரம்

முஸ்தலிபா & பெருநாள் தினத்தின் அமல்கள்



- சூரியன் மறைந்ததும் ஹாஜி முஸ்தலிஃபாவுக்கு செல்ல வேண்டும்.
- அங்கு மஃக்ரிப் தொழுகையுடன் இஷாவையும் சேர்த்து சுருக்கி தொழ வேண்டும். நடுஇரவு வரையிலும் தொழுதிட முடியாமல் இஷா தப்பிப் போவதைப் பயந்தாலே தவிர! அப்படிப் பயந்தால் நடுஇரவுக்கு முன்பே இஷாத் தொழுகையைத் தொழுதிட வேண்டும்., எந்த இடத்திலானாலும் சரியே!
- அதிகாலை நேரம் உதயமாகும் வரையில் முஸ்தலிஃபாவில் தங்கி இருக்க வேண்டும்.
- இரவு நேரத்தை தொழுகை, திக்ர் போன்றவற்றில் கழிக்கக் கூடாது. ஏனெனில் நபி(ஸல்) அவ்வாறு செய்யவில்லை.
- பலவீனமானவர்கள், இயலாதவர்கள், பெண்கள் இரவின் நடுப்பகுதிக்குப் பிறகு அங்கிருந்து புறப்பட்டு மினா செல்ல அனுமதி உண்டு.
- ஆனால் மற்றவர்கள் ஸுப்ஹு தொழும் வரையில் முஸ்தலிஃபாவில் தங்கியிருக்க வேண்டும். ஃபஜ்ர் உடைய நேரம் வந்தவுடன் 'அதான்' கூறி சுன்னத் தொழுது, பிறகு 'இகாமா' கூறி ஸுப்ஹு தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.
- ஃபஜ்ர் தொழுத பிறகு முடிந்தால் முஸ்தலிஃபாவில் உள்ள அல்மஷ்அருல் ஹராம் எனும் மலைக்கருகில் நின்று (இப்போது பள்ளிவாசல் அமைந்துள்ள இடமாகும்), கிப்லாவை முன்னோக்கி நன்கு விடியும் வரை துஆ மற்றும் திக்ருகளில் ஈடுபட்டிருக்க வேண்டும்.



- முடியவில்லையெனில் முஸ்தலிஃபாவில் எங்கு வேண்டுமானாலும் துஆ கேட்கலாம்.
- பிறகு சூரியன் உதயமாவதற்கு முன்பாக புறப்பட்டு மினாவை நோக்கி செல்ல வேண்டும். தல்பியா கூறி அடக்கமாகவும் அமைதியாகவும் செல்ல வேண்டும்.



- பாதையில் அல்லது மினாவில் (விரல் நுனி அளவிலான) ஏழு பொடி கற்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.
- மினா சென்றடைந்தவுடன் கடைசி ஜம்ராவான அகபாவிற்கு (பெரிய ஜம்ராவிற்கு) செல்ல வேண்டும்.
- அங்கு தல்பியாவை நிறுத்திவிட வேண்டும்.

Haad - Society of Islamic Guidance in Unaizah
جمعية هداد للدعوة والإرشاد وتوعية الجاليات في عنيزة

பிரசுரம் 4

பெருநாள் தினத்தின் அமல்கள்





- ஜம்ரத்துல் அகபாவை முன்னோக்கி மக்கா இடப்பக்கம் இருக்குமாறும், மினா வலப்பக்கம் இருக்குமாறும் நின்று கொள்ள வேண்டும். இது சுன்னாஹ்வாகும்.
- அவ்வாறு இயலாவிட்டால் ஜம்ராவின் எந்த திசையில் வேண்டுமென்றாலும் நின்று கொள்ளலாம்.
- கையில் இருக்கின்ற ஏழு கற்களை ஒன்றன்பின் ஒன்றாக, தொடர்ச்சியாக, ஒவ்வொரு கல்லை எறியும்போதும் தக்பீர் (அல்லாஹு அக்பர்) கூறி எறியவேண்டும்.

பெரிய கற்கள் / செறுப்பு / காலுறைகளை எறிவது கூடாது.





- இரவின் நடுப்பகுதிக்குப் பிறகு அனுமதி அளிக்கப்பட்டவர்கள் சூரியன் உதயமாவதற்கு முன்பே ஜம்ரத்துல் அகபாவில் கல் எறியலாம்.
- பிறகு தமத்துவு அல்லது கிறான் ஹஜ்ஜு செய்யக்கூடியவர்கள் ஹதிய் – பலிப்பிராணியை அறுக்கவேண்டும்.
- தலைமுடியை மழிக்க வேண்டும் அல்லது குறைத்துக் கத்தரித்துக் கொள்ள வேண்டும். மழிப்பதுதான் சிறந்தது.

கல்லெறிதல், பலியிடுதல், தலைமுடி ஏறக்குதல் – இந்த மூன்று செயல்களில் குறைந்தது எந்த இரண்டை செய்வதன் மூலம் இஹ்ராமின் கட்டுப்பாடுகளில் இருந்து முதல் கட்டமாக விடுபடுகிறார். வழக்கமான ஆடைகளை அணியலாம். நறுமணம் பூசிக்கொள்ளலாம். மனைவியுடன் கூடுவது தவிர உள்ள எல்லாக் கட்டுப்பாடுகளும் நீங்கிவிடுகின்றன.

- கஅபாவுக்குச் சென்று (ஹஜ்ஜுடைய) தவாப் இ(f)பாதா செய்ய வேண்டும் (இந்த தவாப்பில் ரம்ல் மற்றும் இழ்திபாஉ கிடையாது).
- பிறகு ஹஜ்ஜுடைய ஸயீ செய்ய வேண்டும்.
- இந்த தவாஃப் மற்றும் ஸயி மூலம் இஹ்ராமின் கட்டுப்பாடுகள் முற்றாக விலகிவிடும்.

பிறை 10 - இன் அமல்கள் சுருக்கமாக

1

கல்லெறிதல்

2

பலியிடுதல்

3

மழித்தல்

4

தவாப், ஸயீ

பெருநாள் அன்று ஒரு அமலை முற்படுத்தி அல்லது பிற்படுத்தி செய்தது பற்றி நபி(ஸல்) அவர்களிடம் கேள்வி கேட்டபோது முற்படுத்திப் பிற்படுத்திச் செய்வதால் குற்றமில்லை என்றே பதில் சொன்னார்கள்.


அய்யாமுத் தஷ்ரீகின் அமல்கள்



- பிறை 11, 12, 13 ஆகிய நாட்களில் இரவின் பெரும் பகுதியை மினாவில் தங்கி கழிக்க வேண்டும்.

> விரைவாக, ஊர் திரும்ப விரும்புகிறவர் பிறை 12 ஆம் நாளன்று கல் எறிந்துவிட்டு மினாவிலிருந்து வெளியேறிவிடலாம். ஆனால் சூரியன் மறைவதற்குள் மினாவை விட்டு வெளியேறிவிட வேண்டும்.


- தொழுகைகளை ஜமாஅத்துடன் 4 ரக்அத் தொழுகைகளை 2 ரக்அத் ஆக சுருக்கி நிறைவேற்ற வேண்டும்.
- தொழுகைகளுக்குப் பிறகு தக்பீர் சொல்லவேண்டும். மற்ற நேரங்களிலும் அதிகம் தக்பீர், திக்ருகள் செய்தவாறு இருக்கவேண்டும்.
- சூரியன் பகலின் நடுப்பகுதியை கடந்தபின் ஜம்ராக்களுக்குச் சென்று கல் எறியவேண்டும்.
- முதலில் சின்ன ஜம்ராவில் நின்று ஏழு கற்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு முறையும் தக்பீர் கூறி எறியவேண்டும்.
- கல்லேறிந்த பிறகு கிப்லாவை முன்னோக்கி, நீண்ட நேரம் நின்று துஆ கேட்க வேண்டும்.
- பிறகு, நடு ஜம்ராவிற்குச் சென்று முதல் ஜம்ராவில் செய்தது போன்று ஏழு கற்கள் ஒன்றன்பின் ஒன்றாக தக்பீர் கூறி எறிய வேண்டும்.
- பிறகு, அங்கும் கிப்லாவை முன்னோக்கி, நின்று நீண்ட நேரம் துஆ கேட்கவேண்டும்.
- பிறகு, ஜம்ரதுல் அகபா செல்லவேண்டும். அங்கு மேற்கூறிய முறையில் ஏழு கற்களை ஒன்றன் பின் ஒன்றாக எறிந்த பிறகு நிற்காமல் உடனே திரும்பிவிட வேண்டும்.



Haad - Society
of Islamic Guidance
in Unaizah
جمعية هداة
للدعوة والإرشاد
وتوعية الجاليات في عنيزة

பிரசுரம் 6

இறுதி தவாப் (தவாப்புல் விதா)



- ஹாஜி தமது ஊர்/நாட்டிற்குத் திரும்பிச் செல்ல நாடினால் மக்காஹ் சென்று இறுதியாக தவாப்புல் விதா செய்ய வேண்டும். நபி (ஸல்) கூறினார்கள் “கஅபாவை இறுதியாக தவாஃப் செய்யாமல் உங்களில் யாரும் திரும்பிச் செல்ல வேண்டாம்”.
- தவாப்பைத் தொடர்ந்து மகாம் இப்ராஹீமிற்கு பின்னால் அல்லது வேறு எந்த இடத்திலும் இரண்டு ரக்அத் தொழுதிட வேண்டும்.
- மாதவிடாய் மற்றும் நிஃபாஸ் (பிரசவ உதிரப்போக்கு) உள்ள பெண்களின் மீது கடமையில்லை. இப்னு அப்பாஸ் (ரலி) கூறியதாவது: இறையில்லம் கஅபாவைச் சுற்றி (தவாஃப்) வருவதை (ஹஜ்ஜின்) இறுதி வழிபாடாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என மக்கள் கட்டளையிடப்பட்டனர். ஆயினும், மாதவிடாய்ப் பெண்களுக்கு மட்டும் அதில் (‘தவாஃபுல் விதா’வை விட்டுவிட) சலுகை வழங்கப்பட்டுள்ளது. (புகாரி,முஸ்லிம்)
- யார் ஹஜ்ஜின் தவாபுல் இ(f)பாதாவை பயணத்திற்கு முன்னர் தாமதப்படுத்தினாரோ, முந்தைய ஹதீஸ்களின் பொதுவான கருத்தின்படி, அவர் அதனையே (தவாபுல் விதாவாக) இறுதித் தவாப்பாக நிறைவேற்றலாம். இத்தவாப்பிற்குப் பின்னர் ஸயீ செய்ய வேண்டியிருப்பினும், அதைச் செய்துக் கொள்ளலாம்.
- அவர் கண்டிப்பாக "தவாபுல் இ(f)பாதா" எனத் தனித்த நிய்யத் வைக்க வேண்டும் அல்லது "இ(f)பாதா மற்றும் விதா" இரண்டையும் சேர்த்து நிய்யத் வைக்கலாம்.
- எச்சரிக்கை: வெறுமனே "தவாபுல் விதா" எனத் தனித்த நிய்யத் வைத்தால் அது ஈடாகாது. இதுபோன்ற நிலையில், ஹஜ்ஜின் முக்கியமான தவாபுல் இ(f)பாதாவை தனியாகப் புரிய வேண்டியது கட்டாயமாகும்.
- பயணம் முடிந்து திரும்பும் போது “ஆயிபூன தாயிபூன ஆபிதூன லிரப்பினா ஹாமிதூன்” (நாங்கள் திரும்புவோராகவும், மன்னிப்பு வேண்டுவோராகவும், இறைவணக்கமுடையோராகவும், எம் இறைவனைப் புகழ்வோராகவும் இருக்கின்றோம்)" என்று துஆ ஓதுவது சுன்னத்தாகும்.
- ஊர் திரும்பியப் பின் முதலில் பள்ளிவாசலுக்கு சென்று 2 ரக்அத் தொழுவது சுன்னத்தாகும். கஅப் பின் மாலிக் (ரலி) கூறினார்கள்: நபி (ஸல்) அவர்கள் ஒரு பயணத்திலிருந்து திரும்பி வந்தால் முதலில் பள்ளிவாசலுக்குச் சென்று அங்கு இரண்டு ரக்அத்கள் தொழுவார்கள்.....(ஸஹிஹ் புகாரி)

அன்பார்ந்த ஹாஜிகளே!!!



حجاً مبروراً، وسعياً مشكوراً، وذنباً مغفوراً

இறுதியாக, அன்பார்ந்த ஹாஜிமார்களே! சகோதர! சகோதரிகளே!

உங்களது இறைவனைக் குறித்து நல்லெண்ணம் கொள்ளுங்கள்! அவன்தான் இந்த மகத்தான வழிபாட்டை (ஹஜ்) செய்ய உங்களுக்கு வழி வகுத்தான். அவனிடம் மன்றாடுவீராக!

அல்லாஹ் நமது ஹஜ்ஜை ஏற்றுக்கொண்டு, பாவங்களை மன்னித்து, ஹஜ்ஜிலிருந்து திரும்பும் போது அன்றைய தினத்தில் பிறந்த பாலகனைப் போன்று தூய்மையனவர்களாக திரும்பிட நற்பாக்கியத்தை தந்தருள்வானாக !!

உறுதியான ஈமான், நல்ல அமல்கள், இறைவனுக்கு அடிபணிதல் ஆகியவற்றில் நாம் எப்போதும் நிலைத்திருக்க, அவன் நமக்கு நல்வாய்ப்பை வழங்குவானாக!

எச்சரிக்கை! மீண்டும் எச்சரிக்கை! அல்லாஹ் நம்மை பாவங்களிலிருந்து காத்தப் பிறகு மீண்டும் அவனுக்கு மாறுசெய்வதிலிருந்து விலகி கொள்வோம்...

"(மனிதர்களே! உறுதிப்படுத்திய உடன்படிக்கைகளையும் சத்தியங்களையும் துண்டிக்கும் விஷயத்தில்) தான் உறுதியாக நெய்தபின் அவன் நெய்ததை பல துண்டுகளாக்கி விட்டவனைப் போன்று நீங்களும் ஆகிவிட வேண்டாம்," (16:92)

மாறாக, "எமது இறைவன் அல்லாஹ்" என்று உறுதியாகக் கூறி, நேரான வழியில் நிலைத்து நின்றவர்களில் ஒருவராக இருப்போம்!

நல்லமல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான அடையாளம் என்பது, தொடர்ந்து இறைவழிப்பாட்டில் இருப்பதும், நன்மையைத் தொடர்ந்து செய்வதுமே என்பதை மார்க்க அடிபடைகளிலிருந்து அறியலாம்.

அல்லாஹ் எம்மிடமிருந்தும், உம்மிடமிருந்தும் நல்லறங்களை ஏற்றுக்கொள்வானாக!.

"அவனது அருளாலேயே நன்மைகள் நிறைவடைகின்றன."

அல்லாஹ்வின் ரஹ்மதும், ஸலாவத்தும் நபி முஹம்மது (ஸல்) அவர்களின் மீதும், அவர்களது பரிசுத்தமான குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் மறுமை நாள் வரையில் அவர்களை பின்பற்றும் அனைவரின் மீதும் உண்டாவதாக!

تقبل الله منا ومنكم

ஹஜ் செய்முறை விளக்கப்படம்



Haad - Society of Islamic Guidance in Unaizah
جمعية هاد للدعوة والإرشاد وتوعية الجاليات في عنيزة

குறிப்புகள்



ملخص أعمال الحج اليومية (اللغة التاميلية)

ஹஜ் தினசரி வழிகாட்டி

வெளியிடு: தமிழ் பிரிவு - ஹாத் அழைப்பு மையம் உனைஸா, சவுதி அரேபியா.

+966 539225551

جمعية هاد
للدعوة والإرشاد
وتوعية الجاليات في عـنيزة

Haad - Society
of Islamic Guidance
in Unaizah